மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்
<u>அ.வ.எண்.348/2020</u>

**நாள்– 07.04.2026**

**பி.வா.சா.2 – சசிகுமார்**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

1) 1ம் பிரதிவாதி அளித்த சாட்சியத்தில் என்ன என்ன விட்டுப்போன விவரங்களை நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் தெரியாது. இவ்வழக்கில் உள்ள மற்ற பிரதிவாதிகள் யார் யார் என்று எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நான் அவர்களுக்கும் சேர்த்துதான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனைவரும் ஏதேனும் சங்கம், குழு, அமைப்பு வைத்துள்ளோமா என்றால் இல்லை. 9ம் பிரதிவாதி வீரமாத்தி கோவிலின் பூசாரி என்றால் சரிதான். 9ம் பிரதிவாதியும் தாசபோயன், கந்தபோயன் ஆகியோர் பங்காளிகள் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இவ்வழக்கினை தாக்கல் செய்த சமயத்தில் எங்களுடன் தான் இருந்தார் என்றாலும் தற்போது எங்களுடன் கலந்து கொள்வதில்லை என்றால் சரிதான். வருடாவருடம் கோவிலில் பண்டிகை போடுவதற்கு முன்பு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துவிடுவோம் என்றால் சரிதான்.

2) அவ்வாறு நாங்கள் கொடுத்த புகாரில் வருவாய் கோட்டாட்சியர் 21.02.2018 தேதியில் விசாரணைக்கு வருமாறு கொடுத்த அழைப்பாணை தான் பி.வா.சா.ஆ.1 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் "ஸ்ரீ சக்தி விநாயகர் கோவில் சம்பந்தமாக கடந்த 2015ம் ஆண்டு முதல் பிரச்சனை இரு சமூகத்திற்கும் இடையே ஏற்பட்டது என்றும், மேற்படி பிரச்சனை தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் ஒருதரப்பினர் மட்டும் கோவிலை திறந்து வழிபாடு செய்கின்றனர் என்றும், இந்த மாதம் திருவிழா நடத்த ஏற்பாடு செய்கின்றனர் என்றும் இந்த செயல் இரு சமூகத்திற்கிடையே மீண்டும் மோதல் நடைபெறும் சூழல் ஏற்பட்டுள்ளது என்றும் இதனை தடுத்து மோதல் ஏற்படா வண்ணம் கோவிலை பூட்டி சாவியை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று புகார் வரப்பெற்றது" என்று குறிப்பிடப்பட்டுள்ள மனு விவரம் சரிதான் என்றால் சரிதான்.

3) நாங்கள் கொடுக்கும் ஒவ்வொரு மனுவிலும் கோவிலை பூட்டி சாவியை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் குறிப்பிடுவோம் என்றால் இல்லை. அவ்வாறு கோவிலை பூட்டி சாவியை அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எத்தனை மனுவில் குறிப்பிட்டுள்ளோம்

என்றால் ஓரிருமுறை ஆகும், அனைத்து சமூகத்தினரும் சேர்ந்து சாமி கும்பிட வேண்டும் என்று தான் மனு கொடுப்போம். 1ம் பிரதிவாதி மேலே குறிப்பிட்ட விவரத்தினை குறித்து அளித்த சாட்சியத்தினை சரிசெய்ய வேண்டி நான் தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் வளர்பிறையில் திருவிழா நடக்கும் என்றால் சரிதான். அப்போது பொங்கல் வைப்பது, மாவிளக்கு எடுப்பது போன்ற விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும்.

4) காவடி கட்டுவது வருடம் ஒரு முறை நடக்கும் என்றால் சரிதான். மேற்படி காவடி எங்கு கட்டப்படும் எங்கு எடுத்துச் செல்லப்படும் என்று எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மேற்படி காவடி கட்டுவது குறித்து அளித்த சாட்சியத்தினை தான் நானும் சாட்சியமாக கூறுகிறேன் என்றால் சரிதான். தாவா கோவிலுக்கு கும்பாபிஷேகம் எந்த எந்த வருடம் நடத்தப்பட்டது என்று எனக்குத் தெரியுமா என்றால் 2002ம் வருடம், வேறு எந்த வருடத்தில் நடத்தப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. 2002ம் வருடம் கோவிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட விவரத்தினை கோவில் கல்வெட்டில் பார்த்து தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல, கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டுதான் தெரியும்.

5) கடகடப்பான் கோவில் பக்கத்தில் கிழக்கில் உள்ள காலியிடத்தின் வடபுறம் வாதிகள் மாரியம்மன் கோவில் கட்டி வருகிறார்கள் என்றால் கோவில் கட்டுகிறார்கள், எந்த கோவில் என்று தெரியாது. ஸ்ரீ விநாயகர் சமுதாய அறக்கட்டளை என்ற அறக்கட்டளை ஆரம்பித்து பத்திரம் பதிவு செய்து வாதிகள் மேற்படி மாரியம்மான் கோவிலை கட்டி வருகிறார்கள் என்றால் எனக்குத் தெரியாது. இவ்வழக்கில் சமீபத்தில் வாதிகள் ஒரு கோவிலை இடித்துவிட்டு வேறு கோவிலை கட்டுவதாக எங்களது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுக்கும் வாக்குமூலம் தேவையற்றது என்றாலும், பி.வா.சா.ஆ.1 அளித்த வாக்குமூலத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி (To fill up the lacunae) செய்யவேண்டி வாக்குமூலம் அளிக்கிறேன் என்றாலும் அதனால் எனது வாக்குமூலம் ஏற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**

**(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**